2014 ஆகஸ்ட் 7]

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவரது தொகுதி கள்ளக்குறிச்சியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு கருத்துரு ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ளது எனவும், அதற்கான பணிகள் விரைவுபடுத்தப்படுமா என்றும் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், அந்தப் பகுதி ஏற்கெனவே துணை மின் நிலையம் அமைப்பதற்கு 12-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் தேர்வு செய்யப்பட்டிருந்தால், அந்தப் பணியை விரைவாக முடிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 362, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

362—

பாலத்தை அகலப்படுத்துதல்

***20721—திரு. கா. தமிழரசன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்கு தொகுதி, யா. ஒத்தக்கடை பகுதியில் நெடுஞ்சாலையிலுள்ள குறுகிய பாலத்தை அகலப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

மதுரை கிழக்கு தொகுதி, யா. ஒத்தக்கடை நெடுஞ்சாலையிலுள்ள குறுகிய பாலத்தை இவ்வாண்டின் ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின்மூலம் அகலப்படுத்த பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 ஆகஸ்ட் 7

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன் அவர்கள்.

முற்பகல் 10-25

திரு. கா. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், விவசாயிகளின் விடிவெள்ளி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மதுரை மாவட்டம் விவசாயத்தை நம்பி வாழும் மாவட்டம். முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்திக் கொடுத்த (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மதுரை மாவட்டத்தில் உள்ள வாய்க்கால்களைச் சீர்செய்திட, செம்மைப்படுத்திட தண்ணீர் சிந்தாமல் விவசாயிகளுக்குச் செல்ல வேண்டுமென்ற காரணத்தால், அதற்காக 40 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நன்றியை கூறிக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலுள்ள கடவூரில் துப்பாக்கி செய்யும் தொழிற்சாலைக்கு ரூபாய் 50 இலட்சத்தை வழங்கியமைக்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் ஒருமுறை நன்றியை கூறிக்கொள்கிறேன். என்னுடைய மதுரை கிழக்கு தொகுதியில் யா. ஒத்தக்கடையில் ஒரு குறுகிய பாலம் உள்ளது. அந்தப் பாலத்தை அகலப்படுத்துவது தொடர்பாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்ன மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி திருத்துறைப்பூண்டி சாலையில் கோரையாற்றின் குறுக்கே மிகவும் பழமையான குறுகிய பாலம் இருக்கிறது. 2011-2012 ஆம் ஆண்டு புதிய பாலம் கட்ட டெண்டர் விடப்பட்டும், இதுவரை அந்தப் பணி தொடங்கப்படவில்லை. அந்தப் பாலம் இடிந்தால்,

2014 ஆகஸ்ட் 7]

மன்னார்குடியிலிருந்து திருத்துறைப்பூண்டி செல்ல சுமார் 50 கிலோ மீட்டர் தூரம் சுற்றிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும். ஆகவே, ஒப்பந்ததாரர்கள் இந்த ஆண்டு அப்பணிகளைத் தொடங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரையாற்றின் குறுக்கே பாலத்தை விரைந்து கட்ட வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். எதற்காக காலதாமதம் ஏற்படுகிறது என்பதை ஆய்வு செய்து, விரைந்து அந்தப் பணியைத் துவங்கிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி அவர்கள்.

திரு. மு. ரெத்தினசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். கரிகால் சோழன் கட்டிய கல்லணையிலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஓராண்டிலே கரிகால் சோழனுடைய மணிமண்டபத்தைக் கட்டி, அதைத் தன்னுடைய திருக்கரங்களால் திறந்து வைத்தார்கள். ஆடிப்பெருக்கு அன்று பல்லாயிரக்கணக்கான திருமணமான தம்பதியர் அங்கே வந்து அதைக் கண்டு களித்தார்கள். திருவையாறு தொகுதி, ரெட்டிப்பாளையம் ஊராட்சியிலே கல்லணைக் கால்வாயின் குறுக்கே ஒரு பாலம் அமைக்க வேண்டுமென்று நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. அதேபோல, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த இரண்டு பாலங்களையும் விரைவாகக் கட்டி முடிக்க மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கல்லணை கால்வாயின் குறுக்கே ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று இங்கே வினா தொடுத்திருக்கின்றார்கள். 2014-2015 ஆம் நிதியாண்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தப் பாலத்தைக் கட்டுவதற்காக அறிவித்திருக்கிறார்கள். விரைந்து இந்தப் பாலப் பணிகள் துவங்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.*

திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரியில் கடகத்தூர் மேம்பாலம், குமாரசாமிப்பேட்டை மேம்பாலம், வெண்ணாம்பட்டி மேம்பாலம், அதியமான்கோட்டை மேம்பாலம் ஆகிய மேம்பாலங்கள் கட்டுவதாக அறிவிக்கப்பட்டது. அந்தப் பணிகள் இன்னும் தொடங்கப்படவில்லை. அவை எப்போது தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இரயில்வே மேம்பாலம் பற்றி குறிப்பிடுகின்றார் என்று கருதுகின்றேன். அதைக் கட்ட வேண்டுமென்றால், அதற்கு சில விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கு கால அவகாசம் தேவைப்படும். ஆகவே, அங்கே உடனடியாக மேம்பாலப் பணிகளைத் துவக்க முடியாது; நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும். இரயில்வே துறையும், மாநில அரசும் இணைந்து செய்யக்கூடிய பணியாக இருக்கின்ற காரணத்தினால், விரைந்து முடிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

2014 ஆகஸ்ட் 7]

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை தொகுதி இளையான்குடி சாலையில் ஒரு இரயில்வே மேம்பாலமும், அதேபோல நெடுஞ்சாலைப் பகுதியில் இருக்கக்கூடிய ஒரு பாலமும், முடிக்கரை சாலையில் ஒரு பாலமும், இளங்காட்டூர், தமராக்கி, புதுக்குளம் உள்ளிட்ட 5 இடங்களில் உள்ள பாலங்களும் நீண்ட காலமாக அமைக்கப்படாமல் இருக்கின்றன. அந்தக் கோரிக்கைகளைத் தொடர்ந்து முன்வைத்துக் கொண்டிருக்கிறேன். இந்த முறையாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு, அந்தப் பாலங்களைக் கட்டித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன். ** எப்படியாவது அந்தப் பாலங்களை உருவாக்கித் தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011-2012 ஆம் ஆண்டில் 151 கோடி ரூபாயிலே 65 பாலங்களும், 2012-2013-ல் 235 கோடி ரூபாயில் 121 பாலங்களும், 2013-2014 ஆம் ஆண்டு 256 கோடி ரூபாயில் 125 பாலங்களும், ஆக, 2011 முதல் 2014 ஆம் ஆண்டு வரை கடந்த 3 ஆண்டுகளில் 642 கோடி ரூபாயில் 311 பாலங்கள் கட்டுவதற்கு ஆணையிட்டு, இன்றைக்கு 137 பாலங்கள் முடிவுபெற்று, மாண்புமிகு அம்மா அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. அதோடு, இந்த 2014-2015 ஆம் நிதியாண்டில் NABARD திட்டத்தின்கீழ் 300 கோடி ரூபாயில் 100 பாலங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கின்ற கோரிக்கைகளையெல்லாம், கனிவோடு பரிசீலித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, ஆங்காங்கே பாலங்கள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. அதன் தொடர்ச்சியாக*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[2014 ஆகஸ்ட் 7

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரயில்வே மேம்பாலம் மற்றும் 5 இடங்களிலே பாலங்கள் கட்டித் தர வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் ** என்று சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.

திரு. கா.கோ. ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். என்னுடைய திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி, திருப்பத்தூர்-திருவண்ணாமலை நெடுஞ்சாலையில், ரிஷிமங்கலத்தில் ஒரு குறுகிய பாலத்தையும், பேராம்பட்டு ஊராட்சியில் ஒரு குறுகிய மேம்பாலத்தையும் விரிவுபடுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரிஷிமங்கலம் மற்றும் பேராம்பட்டு பகுதிகளிலே உள்ள குறுகிய பாலங்களை அகலப்படுத்த வேண்டுமென்று இங்கே கேட்டிருக்கின்றார்கள். சாலை அகலமாக இருந்து, பாலம் குறுகியிருக்கக்கூடிய பகுதிகளையெல்லாம் கண்டறிந்து, அந்தப் பாலங்களை விரிவுபடுத்த வேண்டும் என்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த நிதி ஒதுக்கீட்டிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்த இரண்டு குறுகிய பாலங்களையும் விரிவுபடுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2014 ஆகஸ்ட் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.*

திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தின் காவல் தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசையை நோக்கி வணங்குகிறேன். கம்மாபுரம் ஒன்றியம், காவலூர் ஊராட்சியையும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் புதிதாக உருவாக்கப்பட்ட ஸ்ரீமுஷ்ணம் ஒன்றியத்தையும் இணைக்கும் வெள்ளாற்றின் குறுக்கே காவலூர்-கள்ளிப்பாடி இடையே பாலம் அமைக்க வேண்டும். இந்த இரண்டு கிராமங்களையும் இணைத்தால், 12 கிராம பொது மக்கள் சென்று வருவதற்கு வசதியாக இருக்கும். எனவே, காவலூர், கள்ளிப்பாடியை இணைக்கின்ற அந்தப் பாலத்தை அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டுகூட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று புவனகிரியிலே ஒரு உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு ஆணையிட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெள்ளாற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைக்கவேண்டும் என்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள்.*

திரு. ஆர். சுந்தர்ராஜன்: *மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நிரந்தர முதல்வர், காவேரி கண்ட தாய், பொன்னியின் செல்வி, மக்களின் பசி தீர்க்க வந்த அன்னபூரணி,*

‘மக்களுக்காக நான்’ ‘மக்களால் நான்’ என்னும் உயர்ந்த நோக்கில், மக்களுக்காகவே வாழ்ந்து வரும், தமிழக வரலாற்றில் மிக உன்னதமான சாதனைகளைப் படைக்கும், தமிழகத்தின் நிரந்தர முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது பணிவான வணக்கம். பொதுமக்களின் நலனுக்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அனைவரும் பாராட்டும் வகையில் செயல்பட்டு வருகிறது. முல்லை-பெரியாறு அணையின் கொள்ளளவை 142 அடியாக உயர்த்தியது; காவேரி தீர்ப்பை அரசிதழில் வெளியிடச் செய்தது; இலவச மடிக்கணினி; அம்மா உணவகம் தந்தது; தமிழர்களின் பாரம்பரிய உடையான வேட்டி பிரச்சினை போன்ற அனைத்து பிரச்சினைகளையும் தீர்க்க துரிதமான நடவடிக்கைகளை எடுத்தது என்கிற வகையில் தமிழக மக்களின் சிறப்பான பாராட்டைப் பெற்றுள்ளது. உதாரணமாக, நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலே கிடைத்த வெற்றி அகில இந்தியாவையும் திரும்பிப் பார்க்க வைத்தது. ஓட்டைக் கப்பல்களையும், சாட்டை இல்லாத உளுத்துப்போன பம்பரங்களையும், ஊசிப்போன மாம்பழங்களையும், ஒன்றுக்கும் உதவாமல் தமிழ், தமிழ் என்று மக்களை ஏமாற்றிய கட்சிகளையும் தூக்கியெறிந்து மக்களின் மனதில் நீங்காத இடம் பெற்று தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாய் விளங்கும் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை மீண்டும் வணங்குகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மத்திய தொகுதிக்குட்பட்ட பெரியார் பேருந்து நிலையப் பகுதியில் நிலவும் போக்குவரத்து நெரிசல் தீர, அடுக்குமாடி மேம்பாலம் கட்ட வேண்டும் என கோரிக்கை வைக்க விரும்புகிறேன். அதோடு, மதுரை காளவாசல் பகுதியில் மேம்பாலம் கட்டும் பணி எந்த நிலையில் உள்ளது என்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்றும் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஆகஸ்ட் 7]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியில் காளவாசல், சந்திக்குளம் மற்றும் மதுரை மாநகரத்தில் உள்ள பெரியார் பேருந்து நிலையம் ஆகிய இரண்டு இடங்களில் கட்ட வேண்டிய பாலங்களின் நிலை என்ன என்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2012-2013 ஆம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் இந்த இரண்டு இடங்களிலும் பாலம் கட்டப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். தற்போது இந்த இரண்டு பணிகளுக்கும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகவே, காளவாசல் பகுதிக்கும், பெரியார் பேருந்து நிலையப் பகுதிக்கும் 2 உயர்மட்டப் பாலங்கள் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கின்ற பணி நடைபெறுகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 363, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

363—

கயிறு தொழிற்சாலை

***20103—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சேலம் இரும்பாலை அருகே கயிறு தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேலம் இரும்பாலை அருகில் கயிறு தொழிற்பேட்டை அமைக்கும் கருத்துரு